**News:** The Fifth Graduation Day was held in the presence of Mr. S. R. Ramanan, Former Director, Indian Meteorological Centre.

**Newspaper: Times of India Published:20/4/16.**

தி இந்து 10/4/16 – 6th Page




▸▸ ஸ்ரீ சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியின் 5-வது பட்டமளிப்பு விழாவில் கல்லூரி துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து, தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து, மைக்ரோசாஃப்ட் நிறுவன சேவை பயிற்சித் தலைவர் நிதின் சர்மா, இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை முன்னாள் இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன், கல்லூரி முதல்வர் கே.பழனிகுமார், சாய்ராம் கல்விக் குழும அறங்காவலர் ஜெ.சர்மிளா ராஜா, செயல் இயக்குநர் எம்.சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஸ்ரீ சாய்ராம் கல்லூரி 5-வது பட்டமளிப்பு விழா

# சவால்களை எதிர்கொண்டு மன உறுதியுடன் உழைப்பவர்களுக்கு வெற்றி நிச்சயம்

### இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை முன்னாள் இயக்குநர் பேச்சு

**சென்னை**

ஸ்ரீ சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியின் 5-வது பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 446 பேர் பட்டங்களை பெற்றனர். அவர்களில் 62 பேர் சிறப்பு தகுதியிலும், 360 பேர் முதல் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

நிகழ்ச்சியை கல்லூரி துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து தொடங்கி வைத்தார். தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து தலைமை உரையாற்றினார். மைக்ரோசாஃப்ட் நிறுவன சேவை பயிற்சித் தலைவர் நிதின் சர்மா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பேசும்போது, "ஃபிலிப்கார்ட் நிறுவனம் இளம் பட்டதாரி தொழில் அதிபர்களால் நடத்தப்பட்டு ரூ.100 கோடிக்கு மேல் வணிகம் செய்யும் நிறுவனமாக திகழ்கிறது. இளம் பட்டதாரிகளாகிய நீங்கள் உங்கள் அணுகுமுறையை மெருகேற்றிக்கொள்ள வேண்டும்" என்றார்.

இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை விஞ்ஞானி மற்றும் முன்னாள் இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் மாணவர்களுக்கு பட்டம் வழங்கி சிறப்புரையாற்றும்போது, "நீங்கள் மேற்படிப்பு படிக்க GATE/TOEFL நுழைவுத் தேர்வின் அவசியத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். மேலாண்மை கல்வி மற்றும் இந்திய ஆட்சியியல் துறை தேர்வு எழுதினாலும் வேலை வாய்ப்பு உண்டு. சவால்களை எதிர்கொண்டு மன உறுதியுடன் உழைப்பவர்களுக்கு வெற்றி நிச்சயம்" என்று கூறினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் கே.பழனிகுமார், சாய்ராம் கல்விக் குழும அறங்காவலர் ஜெ.சர்மிளா ராஜா, செயல் இயக்குநர் எம்.சத்தியமூர்த்தி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறை தலைவர் எ.ராஜேந்திர பிரசாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.